மயிலாடுதுறை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ஓ.மு எண்: 1783 /அ1/2024, நாள்21.10.2024

பொருள்: பள்ளிக்கல்வி – தமிழ்நாடு – அமைச்சுப்பணி – கருணை அடிப்படை நியமனம் – மயிலாடுதுறை மாவட்டம் திருவாளபுத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி இடைநிலை ஆசிரியர் திரு.கோ.மனோகரன் – 01.09.2014 இல் இறப்பு – வாரிசுதாரரான மகன் திரு.ம.கார்த்தி என்பாருக்கு கருணை அடிப்படையில் 14.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் சார்பு.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்று வேலைவாய்ப்பு (க்யூ 1))த்துறை நாள் – 02.03.2016
2. அரசாணை நிலை எண்.48 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1)த்துறை நாள் – 26.02.2021
3. அரசாணை (நிலை) எண்.151 பள்ளிக் கல்வி (பக1(1)த்துறை நாள் – 09.09.2022
4. மயிலாடுதுறை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் ந.க.எண்.0022/அ1/2021, நாள் – 13.10.2022, 24.06.2023
5. அரசுக் கடித எண் (efile) எண். 4419/தொ.க. 1(1)/2024–1 நாள் – 17.05.2024
6. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.26062/ஜே/இ2/2023 நாள் – 22.05.2024
7. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.038204/ஜே/இ2/2023 நாள் – 07.06.2024

********************

மயிலாடுதுறை மாவட்டம், திருவாளபுத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்த திரு.கோ.மனோகரன் என்பார் பணியில் இருக்கும் போது 01.09.2014இல் காலமானார். அவரது மகன் திரு.ம.கார்த்தி என்பார் கருணை அடிப்படையில் பணியில் நியமனம் வழங்கக்கோரி 05.06.2015 அன்று விண்ணப்பித்துள்ளார். திரு.ம.கார்த்தி என்பார் 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வினை ஏப்ரல் 2012இல் தேர்ச்சி பெற்றுள்ளார். இவரின் பிறந்த தேதி 06.06.1997, மேலே 1இல் படிக்கப்பட்ட அரசாணைப் படி தனியர் கருணை அடிப்படையிலான அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

இறந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது. அவருடைய குடும்பத்தில் எவரும் அரசுப் பணியில் இல்லை என்பதை கருத்தில் கொண்டு திரு.ம.கார்த்தி என்பாருக்கு, மயிலாடுதுறை மாவட்டம் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.0027/அ1/2021 நாள் –13.10.2022ன் படி கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு அவர் 14.10.2022 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாக மேல் தெரிவிக்கப்பட்ட நிலையில் திரு.ம.கார்த்தி என்பாரின் பணியினை தனியர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியில் இணைந்த 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு கருத்துருக்கள் பணிந்து அனுப்பப்பட்டது.

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் கடித ந.க.எண்.038204/ஜே/இ2/2023 நாள் – 07.06.2024 இல் அனைத்தும் அசல் சான்றிதழ் மற்றும் கருத்துருவினை இணைத்து அரசுக் கடித எண் (efile) எண். 4419/தொ.க. 1(1)/2024–1 நாள் – 17.05.2024 இல் தெரிவிக்கப்பட்டவாறு நியமன அலுவலரான முதன்மைக் கல்வி அலுவலர் நிலையில் விதித் தளர்வாணைகள் தேவைப்படாதநிலையில் பணிவரன்முறை செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் மற்றும் அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு திரு.ம.கார்த்தி, இளநிலை உதவியாளர், திருமங்கலம், அரசு மேல்நிலைப் பள்ளி, என்பாரது கருத்துரு ஆய்வு செய்து அதனை ஏற்று தமிழ்நாடு அமைச்சுப் பணியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்

பணிநியமனம் செய்யப்பட்ட திரு.ம.கார்த்தி என்பாரின் பணியினை பணி நியமனத்திற்கு தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனை அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் | பெயர்/பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | கல்வித் தகுதி | பிறந்த தேதி மற்றும் பணிநியமன நாளில் வயது | இளநிலை உதவியாளர் பதவியில் | |
|---|---|---|---|---|---|
| | | | | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
| 1 | திரு.ம.கார்த்தி, இளநிலை உதவியாளர், அரசு மேல்நிலைப் பள்ளி, திருமங்கலம். | 10ஆம் வகுப்பு தேர்ச்சி | 06.06.1997 25 வயது | 14.10.2022 முற்பகல் | 14.10.2022 முற்பகல் |

இத்துடன் பெறப்பட்ட தனியரது பணிப்பதிவேடு மற்றும் அசல் கல்விச் சான்றிதழ்கள் பரிசீலனைக்குப் பின் திரும்ப அனுப்பி வைக்கப்படுகிறது.

இவ்வாணை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதலையும்,, பணிவரன்முறை சார்ந்த பதிவுகளை தொடர்புடையவரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளவும், சார்ந்த அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது.

21/10/2024

முதன்மைக் கல்வி அலுவலர்,
மயிலாடுதுறை.

5/5

24.10.2024

பெறுநர்,

1.தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, திருமங்கலம்.
(தொடர்புடையவர் கூடுதல் படியுடன்)

நகல்,

1. பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) சென்னை – 06
பணிந்தனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி) மயிலாடுதுறை.